*Registered as a News Paper*

மக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

**THE EELANAATHAM** — Peoples Daily — மக்கள் தினசரி

நாதம்:- 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | வைகாசி 21 | (03 - 06 - 1992) | புதன்கிழமை | ஓசை: 106


குண்டசாலை

## விவசாய பயிற்சிக் கல்லூரி தெரிவில் தமிழர் புறக்கணிப்பு

குண்டசாலை விவசாய பயிற்சிக் கல்லூரி தெரிவில் தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வட-கிழக்கு மாகாணத்தில் 1991 இல் நூறு தமிழர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி இருவர் மட்டுமே குண்டசாலையில் பயிற்சிக்கென தெரிவாகியுள்ளனர். 1992 இல்மார்ச் மாதத்தில் நடந்தபோட்டிப்பரீட்சையில் நூற்றுக்கும் அதிகமான தமிழர்கள் பரீட்சைக்கு தோற்றினர் ஐவர் மட்டுமே தெரிவாகினர். பொதுநிர்வாக அமைச்சின்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் இராணுவம் சந்திக்கும் பேரிழப்பு: "குடாநாட்டு போருக்கு ஒரு எச்சரிக்கை"

## சிறிலங்காவின் போர்த்திட்ட விளைவுகள் குறித்து பி. பி. ஸி.

(லண்டன்)

"முகாம் விஸ்தரிப்பு நடவடிக்கை என வடபகுதியில் தாக்குதலைத் தொடங்கிய இராணுவம் புலிகளின் கடும் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருந்தது. எண்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 150 பேருக்கு மேல் காயமடைந்தனர். இது ஒரு சாதாரண விசயமல்ல. யாழ். குடாநாட்டின் மீது தாக்குதல் நடாத்தத் திட்டமிடும் இராணுவத் தலைமைக்கு இது நல்லதொரு பாடமாகும்.'' இவ்வாறு பி. பி. ஸி நேற்றிரவு தெரிவித்தது.

யாழ். குடாநாட்டின் மீது தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளப்போவதாக இராணுவம் பல முறை அறிவித்தது. ஆனால், இத்தாக்குதல் குறித்து இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் பலமான கருத்து மோதல்கள் நிலவுகின்றது. இதேவேளை கடந்தவார பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ... ரிகளும் ராஜதந்திரிகளும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் யாழ்ப்பாணத்தைப் பிடித்து விட்டால் பிரச்சினை முடிந்து விடும் என்று சிலர் நினைக்கின்றனர். ஆனால்அப்படியல்லதுசண்டை தொடரும். பொதுமக்களின் இழப்புகள் அதிகமாக இருக்கும் என சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்; இராணுவ ரீதியாகச் சொன்னால் முழு அளவிலான தாக்குதல்ஒன்றை மேற்கொள்ளுவதற்கு இராணுவத்திற்கு தந்திரோபாய ரீதியாக நகர்வதற்கான வசதிகள் குறைவாகவே உள்ளன எனவும்,

ஆனால் இராணுவத்தின் சில பிரிவுகள் யாழ்ப்பணத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவ நடவடிக்கை தொடருமாம்

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் தொடரும் எனவும் தெல்லிப்பளையில் இருந்து மேற்குத்திசை நோக்கி பாதுகாப்புப் படையினர் முன்னேறிச் செல்வார்களெனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## எறிகணைவீச்சு

(குருநகர்)

பூநகரி - கல்முனை, பள்ளிக்குடாப்பகுதிகளில் தரித்துள்ள சிறிலங்கா இராணுவம் நேற்று மாலை 4.15 மணியளவில் எறிகணை, துப்பாக்கித் தாக்குதல்களை நடாத்தியது.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதி சிறிலங்கா

## கூச்சல் இடுவதனால் பிரச்சினைகள் தீராது -டி. பி. விஜயதுங்கா

(கொழும்பு)

அடுத்த இரு மாதங்களில் வட - கிழக்கில் பயங்கரவாதத்தை அரசாங்கம் முடிவுக்குக் கொண்டு வந்துவிடும் என பிரதமர் டி. பி விஜயதுங்கா வெலம்பரயில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பாராளுமன்றத்தில் வெறுமனே கூச்சலிடுவதால் இவ்வாறான சிக்கலான ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்பதை எதிர்க்கட்சியினர் உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். அடுத்த இரு மாதங்களினுள் பிரச்சினைக்கு எவ்விதம் தீர்வு காணப்படமுடியும் என்று எதிர்க்கட்சியினர் வினவக்கூடும். ஆனால் போரை முடிவுக்குக் கொண்டு வரும் வரை அத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வரை அதை வெளியிட அரசு விரும்பவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

## வைத்திய வசதி பாதிப்பு நோயாளர் அவதி

வார பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ முகாம் விஸ்தரிப்பு நடவடிக்கையின் போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்பு இராணுவ தலைமைப் பீடத்தை சிந்திக்க வைத்துள்ளது.

ஆனால், பாதுகாப்பு வரி எனவும், வேறு விளைவுகளினாலும் ஏறிவரும் விலையேற்றமும், அதன் காரணமாக அரசாங்கத்திற்கு எதிராக ஏற்பட்டுவரும் எதிர்ப்பும் வடக்கில் ஒரு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு மக்களை திசை திருப்ப வேண்டிய நிலையில் அரசாங்கம் உள்ளதாகவும் பி.பி.ஸி. செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சிறிலங்கா அரசாங்கம் இப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்றை நாடக்கூடிய சாத்தியமில்லை என கொழும்பிலுள்ள அதிகா

# ஆலயங்கள், அகதி முகாம்கள் மீது தாக்குதலை தவிருங்கள்

## ஜனாதிபதிக்கு யாழ். ஆயர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் பாதுகாப்புத்தேடி உயிரைக் காத்துக் கொள்ளக் கூடியகோயில்கள், தேவாலயங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், அகதிமுகாம்கள் போன்ற இடங்களையாவது தாக்குதலின்றித் தவிர்க்குமாறு யாழ். மறை மாவட்ட குருக்களின் ஒன்றியம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவைக் கேட்டுக் கொண்டுள்ளது.

யாழ் ஆயர் அதி வண. தியோகுப்பிள்ளையொப்பமிட்டு அனுப்பியுள்ள இம் மகஜரில்,

படையினரின் இராணுவ நடவடிக்கைகளின் போது தேவாலயங்களிலும், கோயில்களிலும், பாடசாலைகளிலும் மக்களைச் சரணடையுமாறு அரசு அறிவுறுத்துகிறது. ஆனால், அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளின் போது பாடசாலைகளோ, தேவாலயங்களோ அகதிமுகாம்களோ அல்லது வைத்தியசாலைகளோ கூடவிட்டுவைக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

மண்கும்பான் பகுதி சிறிலங்கா இராணுவக் காவலரண்களில் இருந்தும் நேற்றுக் காலை யாழ். கரையோரப்பகுதிகளை நோக்கி கலிபர் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. சேத விபரங்கள் செய்தி எழுதப்படும்வரை அறியவரவில்லை. (21)

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

வலிவடக்கின் பல பகுதிகள் மீது நேற்றும் சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத்தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

# நோயாளர் அவதி

[வவுனியா]

வவுனியா மாவட்டத்தில் உள்ள நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வைத்திய வசதி பெரிதும் பாதிப்படைந்துள்ளதால், நோயாளர்கள் அவதிப்படுகின்றனர்.

இப்பிரதேசத்தில் உள்ள அரசாங்க பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை, மருந்துப் பொருள் பற்றாக்குறை நிலவுகின்றன.

அம்மைத் தடுப்பூசி, ஏற்புத் தடுப்பூசி, காசநோய் தடுப்பூசி, விசர் நாய்க் கடி தடுப்பூசி, போலியோ, முக்கூட்டு வக்ஸீன், இருகூட்டு வக்ஸீன் ஆகிய மருந்துப் பொருள்கள் அறவே இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வைத்திய அதிகாரி இங்கு ஒருவர் மட்டுமே உள்ளார். அவர் இல்லாத சமயங்களில் பதிலுக்கு பணிபுரிவதற்கு எவருமே இல்லை என்றும் கூறப்பட்டது.

குடிநீர் பாதிப்பும், சுகாதார சீர்கேடும் இங்கு தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஒரு மருத்துவ மாதுவும், இன்னொரு பொது மருத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# அலம்பிலில் விமானப்படை அனர்த்தம் குடிமனைகள் மீது கோர குண்டுவீச்சு

## ஆயிரக்கணக்கில் மக்கள் இடம்பெயர்வு

முல்லைத்தீவிலிருந்து அலம்பில் 5ஆம் கட்டை வரையிலான இராணுவ முன்னேற்றம் காரணமாக சிலாவத்தை தெற்கு, அலம்பில், உடுப்புக்குளம், தியோநகர், செம்மலை ஆகிய இடங்களை சேர்ந்த மக்கள் உடைமைகளையும் கைவிட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை முதல் இப்பகுதிகளில் இடம் பெற்றுவரும் விமானக்குண்டு வீச்சு, கடற்படை பீரங்கி குண்டுவீச்சு, எறிகணைவீச்சு தாக்குதல்களினால் இடம் பெயர்ந்து செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

சிறிலங்கா படையினரின் இத்தாக்குதல்களினால் இப்பகுதிளிலுள்ள பொதுமக்களின் வீடுகள், கடைகள் கடற்தொழில் உபகரணங்கள் விவசாய உற்பத்திப்பொருள்கள் என்பன நாசமாக்கப்பட்டுள்ளன.

அலம்பில் மாதிரிக்கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த இடம்பெயர்ந்தோருக்கான குடிசைகள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது அத்தோடு 10க்கு மேற்பட்ட வீடுகள் குண்டு வீச்சால் தகர்த்தெறியப்பட்டுள்ளது. பெருந்தொகையான கால்நடைகள் குண்டுவீச்சுகளால் இறந்துள்ளன

எறிகணை வீச்சுக்களால் காயமடைந்த சல பொது மக்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இப்பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த 300பக்கு மேற்பட்ட பொதுமக்கள் தண்ணீரூற்று முள்ளியவளை பகுதிகளில் தங்கியுள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு பிரதான முகாமிலிருந்து வற்றாப்பளை, வட்டுவாகல் பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுவருகின்றன. அத்துடன் மணிகிண்டிமலை இராணுவமுகாமிலிருந்து செம்மலை நோக்கி எறிகணைவீச்சு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# தாண்டிக்குளம் பாடசாலை இராணுவ முகாமாக மாற்றம்

வவுனியா தாண்டிக்குளம் பாடசாலை இராணுவத்தினரால் தடை முகாமாக மாற்றப்பட்டுள்ளது. பேயாடிகூழாங்குளம் காவல்சோதனை முகாமில் கைது செய்யப்படுபவர்களில் பலர் இந்த முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

தாண்டிக்குளம் பாடசாலை தற்போது வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது அக்கட்டடமே தடுப்பு முகாமாக மாற்றப்பட்டுள்ளது

பாடசாலையில் பல பிரிவுகளாக முள் வேலி போடப்பட்டுள்ளது பாடசாலை வளவைச் சுற்றி மின்சார வயர்கள் போடப்பட்டுள்ளன.

மாதக்கணக்கில் தடுத்து வைக்கப்படும் கைதிகள் மட்டுமே இம் முகாமில் அடைத்து வைக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

# அலம்பில் பகுதியில் ஏழு இராணுவம் பலி

அலம்பில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலொன்றில் ஏழு இராணுவத்தினர் கொலைப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு இராணுவமுகாமிலிருந்து வெளியேறி வந்த இராணுவத்தினர் கடும் இழப்புகளை சந்தித்து வருவது தெரிந்ததே.

கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை

# புலிகளுக்கு ஆதரவாக பாதயாத்திரை தமிழகத்தில் 30 அமைப்புகள் முடிவு

விடுதலைப் புலிகளின் மீது விதிக்கப்பட்ட தடைக்கு கண்டனம் தெரிவிக்கும் முகமாக கன்னியாகுமரிமுதல் சென்னை வரை பாதயாத்திரை ஒன்றை நடாத்துவதற்கு தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக்குழு கடந்த 28ஆம் திகதி கூடி முடிவெடுத்துள்ளது.

மேற்படி குழுவின் கூட்டம் பாட்டாளி மக்கள் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் பண்ருட்டி இராமச்சந்திரன். எழில்மலை, முத்துக்குமார் ஆகியோரும் தமிழர் தேசிய இயக்கம் சார்பில் ப. நெடுமாறன், எம். கே. டி. சுப்பிரமணியம், ப. தண்டபாணி ஆகியோரும் உலகத் தமிழின முன்னேற்றக்கழகம் சார்பில் பெரும் சித்தனாரும் தமிழ்த்தேசப் பொதுவுடமை கட்சி சார்பில் மணியரசன் மற்றும் முப்பது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

தமிழின ஒடுக்கு முறையை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் கரை ஒதுங்கிய இந்திய மீனவர்கள்

மன்னார் பேசாலைக் கடற்கரையில் கரை ஒதுங்கிய நான்கு இந்திய மீனவர்களும் மன்னார் அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணம் செய்த படகில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே கரை ஒதுங்கியதாகவும், மீண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பீரங்கி தாக்குதல்

[அராலி]

தீவக கடற்பரப்பில் தரித்து நிற்கும் சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப் படகில் இருந்து அராலிப் பகுதியை நோக்கித்தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதல்கள் நடாத்தப்பட்டிருக்கிறது.

நேற்று இரவு 11.00 மணியில் ஆரம்பித்த இப் பீரங்கித் தாக்குதல் சுமார் 15 நிமிடங்கள் தொடர்ச்சியாகநடாத்தப்பட்டது பீரங்கித் தாக்குதல் நடாத்தப்பட்ட அதே சமயம் கலிபர்த் தாக்குதலும் இப்பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்டது. [க]

# புலிகளின் தாக்குதலுக்கு 3 பொலிஸார் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பிரதானவீதியால் சென்று கொண்டிருந்த சிறிலங்கா படையினரின் ஜீப் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று சிறிலங்கா பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12.15 மணியளவில் இராணுவ பாதுகாப்புப் பலப்படுததப்பட்டிருந்த மட்டக்களப்புப்பிரதான வீதியில் முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமில் இருந்து செங்கலடி இரா

[4 ஆம் பக்கம் பார்க்க]

# பொலிஸ்நாய் காட்டியதாம் வவுனியாவில்சிறுவன்கைது

(வவுனியா)

ஜனாதிபதி இடம்பெயர் சேவை நிகழ்வின் போது பொலிஸ் நாய் இனங்காட்டி தமிழ்ச்சிறுவன் கைதுசெய்யப்பட்டான்.

கடந்த 30 ஆம் திகதி வவுனியா காமினி மகா வித்தியாலயப் பகுதியில் ஜனாதிபதி

[4 ஆம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## மீண்டும் புதிதாய் பிறப்போம

மீரா வெளியீடு சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய புதிய நாவல் விற்பனையாகிறது. "சோதனைகள் நிறைந்த காலத்தில் வாழ்ந்தாலும் மனம் தளராத இந்த மண்ணின் மைந்தர்களின் கதை" (2625)

## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

உரும்பராய் ஒஸ்கா விளையாட்டுக்கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி, ஆடும் அணிகள்: பாடுமீன் (B) அணியை எதிர்த்து சென்ரொக் (A) அணி மோதும். பாடுமீன் (A) அணியை எதிர்த்து சென்ரொக் (B) மோதும். இவ்வாட்டம் கோண்டாவில் குமரன் மைதானத்தில் 03-06-1992 பி. ப. 3.30 மணிக்கு நடைபெறும். (2629)

## தவறி விட்டது

02-06-1992 அரசடிக்கும் நல்லூருக்கும் இடையில் அடையாள அட்டை ஒன்று தவறி விட்டது. சண்முகம் உதயகுமார், (77/3, திருஞான சம்பந்தர் வீதி, சிவன் கோவிலடி, திருமலை 315215210 V) கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (2630)

# முல்லையில் எறிகணை வீச்சு ஒருவர்காயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் அலம்பில் பகுதியில் தரித்து நிற்கும் சிறிலங்கா இராணுவத்தினர் குமுழமுனைப் பகுதியை நோக்கி அகோர எறிகணைத் தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர். இத் தாக்குதல்களினால் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்திருக்கிறார்.

நேற்று அதிகாலை முதல் மேற்படி பகுதி மீது நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலினால் குமுழமுனைப்பகுதியைச் சேர்ந்த தியாகராசா (வயது 45) என்பவர் பலத்த காயமடைந்திருக்கிறார் (க,ச)

# கட்டுவன் பகுதியில் வீரத்தேவன் வீரச்சாவு

பலாலி இராணுவ முகாமில் இருந்து கட்டுவன பகுதியூடாக முன்னேற முயன்ற இராணுவத்தினருடன் கடந்த சனியன்று தமிழீழ விடுதலைப் புலிகள் தொடுத்த நேரடி மோதலில் த. வி பு. பிரபல பாடகரும், யாழ் மாவட்ட தாக்குதல் படைப்பிரிவின் இசைக்குழுவின் பொறுப்பாளருமான கப்டன் வீரதேவன் (பியுர்ப்மாக், துரைராசா சிவலிங்கம், அரியாலை) வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். அண்மையில் வெளியான "களத்தில் நின்ற வேங்கைகள்" பாடல் ஒலிப்பதிவு நாடாவில் இவரது "போருக்குப் போகும் புலிவீரா" "தாயிலும் மேலான காவலன் யாரடா" "அலைகடல் மீதினில் பயணம்" "எங்களின் தேசம்" ஆகிய பாடல்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். முன்னேற முயன்ற இராணுவத்தின் கவசவாகனத்தை தகர்த்தெறிந்து ஆயுதங்களைக் கைப்பற்றும் வேளை இவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

அன்றைய தினம் மேஜர் சுதன், கப்டன் பவளன், கப்டன் - செல்வன், லெப் - புகழேந்தி, லெப் நித்தி, லெப் நறுகுணம், வீரவேங்கை இறையவன், வீரவேங்கை முகிலன் ஆகியோர் அன்றைய களத்தில் வீரகாவியம் படைத்து வீரச்சாவைத் தழுவிக் கொண்டமை தெரிந்ததே.

# 323-ம் நாள் நினைவஞ்சலி

(வந்தியேட்டி அமைப்பு) [03 - 06 - 1992]



வீரப்பிறப்பு

29- 01 - 1974

வீரச்சாவு

18 - 07 - 1991

சாள்ஸ் அன்ரனி (சீலன்) விசேட அதிரடிப் படைப் பிரிவைச் சேர்ந்த

## வீரவேங்கை நவீனன் (அன்பு)

(திருலோகசிங்கம் அன்பழகன்)

18 - 07 - 1991 கட்டைக்காடு நேரடிச் சமரில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார்.

(புலிக்குப் பிறந்தவன் பூனை இல்லை என்பதை நிரூபித்துவிட்டாய்)

மானிப்பாய் மேற்கு, கட்டுடை. [5 ஆம் நம்பா கடை] -குடும்பத்தினர். (2633)

# நன்றி தெரிவிக்கிறோம்

மில்க்வைற் நிறுவனமும், ஐக்கிய நாடுகள் சங்கம் யாழ். கிளையும், தங்கள் அழைப்பை ஏற்றுப் பூமியின் பாதுகாப்பில் அக்கறை காட்டி "பூமியைப் பேணுவதற்கான திடசங்கற்பத்"தில் பங்கேற்ற அனைவருக்கும் தங்கள் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

இப்புனித கைங்கரியத்தில் கலந்து கொள்ளத் தவறியவர்கள், நேரில் தொடர்பு கொண்டு மில்க்வைற் நிறுவனத்தில் திடசங்கற்பம் ஏற்றுக் கொள்ளும்படி அழைக்கப்படுகிறார்கள். [சி/4494]

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப் பிறப்பு
10-11-1975

வீரச்சாவு
03-06-1991

ஆனையிறவுப் போரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

## வீரவேங்கை சூரன்

(வ. யூட். கௌசிதரன்)

மான உணர்வேந்தும் மறவர் வரிசையிலே
மண்ணின் விடிவிற்காய் உன்னை அர்ப்பணித்தே
வானச் சுடராக மலர்ந்தே பறந்தனையோ?
வண்ணத் தமிழீழ எண்ணக் கனவுடனே
காணும் பொருளெல்லாம் உந்தன் முகம் கண்டு
கலங்கித் தவிக்கின்றோம் விளங்கும் மணிச்சுடரே!
வீணில் போகாது வீரம். தியாகங்கள்
விடியும் பொழுதோடு விரைந்தே வாராயோ?

அனுதாபிகள், சகபோராளிகளின் வருகை விரும்பத்தக்கது.

7/1, அன்ன சத்திர ஒழுங்கை,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

பெற்றோர், சகோதரர்,
மாமி, மைத்துனர்,
உற்றார், உறவினர்.

[2626]

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பொதுப்பட்டமளிப்பு-1992.09 05

டிப்ளோமாக்கள் /பட்டங்கள் / பட்டப்பின் டிப்ளோமாக்கள் / முதுமாணி/ கலாநிதி ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 1992.09 05 யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பொதுப்பட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்தோர் 30-06 92 க்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

1. கலாநிதித் தேர்வு.
2. முது தத்துவமாணித் தேர்வு.
3. முது கலைமாணித் தேர்வு
4. முதுவிஞ்ஞானமாணித் தேர்வு
5. கல்விப் பட்டப்பின் டிப்ளோமாத் தேர்வு 1990
6. வைத்தியமாணி, சத்திர சிகிச்சை மாணி தேர்வு 1990
7. வணிகமாணித் தேர்வு 1990.
8. தொழில் நிர்வாக மாணித் தேர்வு 1990
09 சிறப்பு விஞ்ஞான மாணித் தேர்வு 1990
10. சிறப்பு கலைமாணித தேர்வு 1990
11 பொது விஞ்ஞான மாணித்தேர்வு 1990
12. பொதுக் கலைமாணித் தேர்வு 990
13 சங்கீதம்/ பரதநாட்டியம் டிப்ளோமாத் தேர்வு 1990
14 சித்தவைத்தியமாணி சத்திரசிகிச்சைமாணித் தேர்வு

விண்ணப்பங்களை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக அனுப்பிவைத்தல் வேண்டும் வேண்டுகோட் படிவங்களையும், மற்றும் விபரங்களையும், முத்திரை ஒட்டிய 23x10 செ மீற்றர் அளவுடைய சுய முகவரியிட்ட கடித உறையை உபபதிவாளர்/ தேர்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலை நேரங்களில் தேர்வுக் கிளைக்கு நேரடியாக வந்தோ பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்கு இடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்.

(சி/4497)

# நினைவுகூருகின்றோம்...

## 1992-06-03

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய

★ சி. இராமலிங்கம் (ஈச்சிலம்பத்தை, மூதூர். திருக்கோணமலை)

★ க. கதிர்காமத்தம்பி (ஈச்சிலம்பத்தை, மூதூர், திருகோணமலை)

திருகோணமலை, மூதூர் பகுதியில் ஈச்சிலம்பத்தைக் கிராமத்தைத் தீயிட வந்த சிங்களக் காடையர்களினால் கொலைசெய்யப்பட்ட

★ போழன் (பெரியதம்பி தம்பிராசா - ஈச்சிலம்பத்தை. மூதூர். திருக்கோணமலை)

★ கைலாசபிள்ளை மகேஸ்வரன் (ஈச்சிலம்பத்தை, மூதூர், திருகோணமலை)

1986 ஆம் ஆண்டு அச்சுவேலியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

ஸ்ரீபன் / தீபன் (திருநாவுக்கரசு பிரதீபன்-இல 21 பிரதீபன் வீதி சுண்டிக்குழி யாழ்ப்பாணம்)

1987 ஆம் ஆண்டு யாழ் தொலைத்தொடர்புநிலையத்தில் நிலைகொண்டிருந்த சிறிலங்காப்படையினரின் முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய

2ஆம் லெப். அசோக் (சோலையப்பதேவர் நாகராசா - அடம்பன் மன்னார்)

நோக்கி அகோர எறிகணைத் தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர். இத் தாக்குதல்களினால் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்திருக்கிறார்.

நேற்று அதிகாலை முதல் மேற்படி பகுதி மீது நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலினால் குமுழமுனைப்பகுதியைச் சேர்ந்த தியாகராசா (வயது 45) என்பவர் பலத்த காயமடைந்திருக்கிறார் (க,ச)


பிரிவைச் சேர்ந்த

**வீரவேங்கை நவீனன் (அன்பு)**

**(திருலோகசிங்கம் அன்பழகன்)**

18 - 07 - 1991 கட்டைக்காடு நேரடிச் சமரில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார்.

(புலிக்குப் பிறந்தவன் பூனை இல்லை என்பதை நிரூபித்துவிட்டாய்)

மானிப்பாய் மேற்கு, கட்டுடை. -குடும்பத்தினர்.

[5 ஆம் நம்பர் கடை] (2633)



வண்ணத் தமிழீழ எண்ணக் கனவுடனே
காணும் பொருளெல்லாம் உந்தன் முகம் கண்டு
கலங்கித் தவிக்கின்றோம் விளங்கும் மணிச்சுடரே!
வீணில் போகாது வீரம். தியாகங்கள்
விடியும் பொழுதோடு விரைந்தே வாராயோ?

அனுதாபிகள், சகபோராளிகளின் வருகை விரும்பத்தக்கது.

7/1, அன்ன சத்திர ஒழுங்கை, சுந்தர் மடம், யாழ்ப்பாணம்.

பெற்றோர், சகோதரர், மாமி, மைத்துனர், உற்றார், உறவினர்.

[2626]



# மின் வளத்தின் ஓராண்டு நிறைவு நாள்

மின்னியல் துறையில் பல சேவைகளைச் செய்துவரும் மின்வளம் தனது முதலாவது ஆண்டு நிறைவை இன்று பெருமையுடன் கொண்டாடுகிறது. இந்நாளில் தம்மை வளர்த்த அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், யாவருக்கும் தம் உவகைகலந்த நன்றியைதெரிவிப்பதில் நிறைவடைகின்றது.

தமக்கு ஆதரவு நல்கிய அனைத்து நெஞ்சங்களையும் இனிவரும் ஆண்டுகளிலும் ஒத்துழைப்புத் தந்து தமமை ஆதரிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

## மின் வளத்தின் சேவைகள் பல அவற்றில் சில....

★ வானொலிப்பெட்டி, தொலைக்காட்சிப்பெட்டி, படக்காட்சிப்பெட்டி, (வீடியோ டெக்) விற்பனையும் சீர்செய்தலும்

★ கைக்கடிகாரங்கள் விற்பனையும் சீர்செய்தலும்

★ எழுச்சிப்பாடல்கள், புரட்சிப்பாடல்கள் பதிவு செய்தல்

★ மின்னியல் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்தல்

இன்னும் நீங்கள் மின்னியலில் எந்தப் பொருள்களை வாங்குவதானாலும் விற்பதானாலும் நாடவேண்டிய ஒரே இடம்

# மின்வளம்

இல.81 கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

(சி-4495)



ஈச்சிலம்பத்தைக் கிராமத்தைத் தேடிவந்த சிங்களக் காடையர்களினால் கொலைசெய்யப்பட்ட

★ **போழன்** (பெரியதம்பி தம்பிராசா - ஈச்சிலம்பத்தை, மூதூர், திருக்கோணமலை)

★ **கைலாசபிள்ளை மகேஸ்வரன்** (ஈச்சிலம்பத்தை, மூதூர், திருக்கோணமலை)

1986 ஆம் ஆண்டு அச்சுவேலியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

**ஸ்ரீபன் / தீபன்** (திருநாவுக்கரசு பிரதீபன்-இல 21 பிரதீபன் வீதி சுண்டிக்குழி யாழ்ப்பாணம்)

1987 ஆம் ஆண்டு யாழ் தொலைத்தொடர்புநிலையத்தில் நிலைகொண்டிருந்த சிறிலங்காப்படையினரின் முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய

**2ஆம் லெப். அசோக்** (சோலையப்பதேவர் நாகராசா - அடம்பன் மன்னார்)

**கப்டன் நிக்சன்** (சனகசபை முருகதாஸ் - அராலி மேற்கு. வட்டுக்கோட்டை)

**ரதன்** (உருத்திரா டினேந்திரா - 115/1,அரசடி வீதி. சுந்தர்மடம், யாழ்ப்பாணம்)

1988 ஆம்ஆண்டு மட்டக்களப்பு கருவேப்பங்கேணிப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**சுபாஸ்** நடராசா தேவதாஸ் - இருதயபுரம்மேற்கு மட்டக்களப்பு]

முல்லைத்தீவு/ஒட்டிசுட்டான் கருவேலங்கண்டல் பகுதியல் இந்தியப் படையினர் பதுங்கியிருந்துமேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் ராகவன்** (நாகமணி வரதராஜா - தண்ணீரூற்று. முள்ளியவளை முல்லைத்தீவு)

1989 ஆம் ஆண்டு மணலாறு, களம்பில் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடி மோதலில் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**லெப். அற்றி** [கந்தசாமி கருணாகரன் - கோட்டைக்கல்லாறு, மட்டக்களப்பு(

இதே ஆண்டு தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட மல்லாகத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன், மற்றும் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். டேவிட் வீதியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**லெப். திலக்** [பாலிப்போடி சோமசுந்தரம்-கோயில் போரதீவு மட்டக்களப்பு]

**2 ஆம் லெப். வில்வன்** [பூபாலப்பிள்ளை சதானந்தன் - அம்பிளாந்துறை,மட்டக்களப்பு]

மட்டக்களப்பு கல்லடிப் பகுதயில் தேசவிரோத சக்திகள் கைது செய்ய முயன்றபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**சிவம்** [சோமசுந்தரம் சிவகுமார் - நொச்சிமுனை, மட்டக்களப்பு]

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**சூரன்** [வயூட்.கௌசிதரன் - இல: 91, கிறீன் வீதி, திருக்கோணமலை.]

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களானர். [சி/4493]

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4493)

நல்லூர் கிளை நூலகம்

## சிந்தனைக்கு

கனவுகள் உறங்குவோரின் கற்பனைகள் என்பது போல கற்பனைகள் விழித்திருப்போரின் கனவுகளாகும்.

— ஸர் தாமஸ் ப்ளவுண்ட்


# ஈழநாதம்

61, ஸ்டேஷன் வீதி, யாழ்ப்பாணம் 03-06-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308

த. பெ. எண் 55


## யதார்த்தத்திற்கு புறம்பானது

"வடக்கு- கிழக்கு யுத்தத்தை இன்னும் இரண்டு மாதங்களில் அரசாங்கம் முடிவிற்குக் கொண்டு வந்துவிடும். ஆனால், எவ்வாறு கொண்டு வரும் என தகவல் எதுவும் வெளியிடமாட்டாது. இரகசியமாகவே வைத்திருக்கும்". இவ்வாறு சிறிலங்கா பிரதமர் டி.பி.விஜயதுங்கா தெரிவித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிங்கள அரசியல்வாதிகள் இன்னும் திருந்திய பாடில்லை. சுமார் ஒன்பது வருடங்களுக்கு மேலாகத் தீவிரமாக நடைபெற்றுவரும் ஓர் ஆயுதப்போரை எதுவித முன்னேற்றகரமான நடவடிக்கையும் இன்றி உடனடியாகத் தீர்த்து வைப்போம் எனவும், இரண்டு மூன்று மாதங்களுக்குள் தீர்வு எட்டப்படும் எனக் காலக்கெடு விதிப்பதும் அவர்களுக்குக் கை வந்த கலை. அத்தோடு தமது கடந்தகாலக் கூற்றுக்களையும் பேச்சுக்களையும் மக்கள் மறந்து விடுவார்கள், இதனால் எதையும், எவ்வாறும் பேசலாம் என்பது அவர்களின் எண்ணம்.

தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எதையும் காணக்கூடியதான அரசியற் சூழ்நிலை தற்பொழுது இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வருடத்தின் ஆரம்பத்தில் இனப் பிரச்சினை தீர்விற்கு அரசசார்பற்ற சமாதான நல்லெண்ணக் குழுக்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு அரசாங்க ஒத்துழைப்பு கிடைக்காமையினால் அவை தோல்வியில் முடிவுற்றதோடு, சமாதான தீர்வுகுறித்து அவை தமது முயற்சிகளையும் பெரும்பாலும் கைவிட்டுள்ளன.

இதேவேளை தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் நொய்ந்து போன நிலையில் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. பாராளுமன்றத் தெரிவுக்குழு தமிழர் பிரச்சினைக்கு ஏற்புடைய தீர்வுத்திட்டம் எதை

# பாராளுமன்ற தெரிவுக் குழு செயலிழப்பு பேரினவாத சக்திகள் முட்டுக்கட்டை

இலங்கையில் நீண்ட காலமாக நிலவி வரும் தேசிய இனப்பிரச்சினைக்கு ஏற்புடையதான தீர்வு என்ன? என்பது பற்றி தென்னிலங்கையில் பலரும் அலட்டிக்கொள்வதாகத் தெரிகின்றது. தமிழர்பிரச்சினையின் மூலம் என்ன? ஆணிவேர் என்ன? பக்கவேர் என்ன? என்றெல்லாம் பலவாறான ஆராய்ச்சிகளும் பொழுதுபோக்கு பேச்சுக்களும் தென்னிலங்கை அரசியல்வாதிகளிடையே அலசப்படுகின்றன என்பது செய்திகளின் மூலம் தெரிய வருகிறது. பிரேமதாசா பதவிக்கு வந்ததும் ஆட்டகாசமான ஆரவாரத்துடன் ஆரம்பமான அனைத்துக் கட்சி மாநாடு சத்தமில்லாமலே கதவை மூடிக் கொண்டுவிட்டது. இதோ இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்மொழிகின்றோம் என்று மாரிபுதட்டிக்கொண்டு புறப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பகிஷ்கரிப்பு அறிவிப்புடன் பக்கவாதம் கண்டு படுத்து விட்டது. இச் சூழலில் யானையை பார்த்த குருடர்களின் கதையை நினைவுபடுத்துவது போல கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களின் நிலையிருக்கின்றது.

எனவேதான் கடந்தகால சம்பவங்களை மீண்டும் ஒருதடவை அலசிப் பார்ப்பது அவசியமாகின்றது. இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு தனி அரசு அமைப்பது ஒன்றுதான் தீர்வு என்பதை தமிழ் மக்கள் ஏகோபித்த குரலில் 1977-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் மூலம் எடுத்துரைத்து உள்ளனர். 1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் உதய சூரியன் சின்னத்திற்கும், தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களுக்கும் விழுந்த வாக்குகள் ஒவ்வொன்றும் அவர்களது தனிப்பட்ட வாதத்திறமைகளுக்கோ, அல்லது தனிப்பட்ட ஆற்றல்களுக்கோ விழுந்தவை அல்ல தமிழ் மக்கள் கொண்டிருந்த தனியரசுக்கான வேணவாவை வெளிப்படுத்துபவையாகவே அமைந்திருந்தன என்பதுவே உண்மையாகும்.

ஆனால் தமிழ் மக்களின் ஜனநாயகபூர்வமான இந்த உணர்வுகளை அங்கீகரிக்க மறுத்த சிறிலங்கா அரசாங்கம் அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்ட போது போராட்டம் கூர்மையடைந்தது. மக்கள் போராட்டத்துடன் தம்மை இனங்காட்டிக் கொள்ளலாயினர்.

இரண்டு ஆண்டுகால அடக்குமுறை பயனற்றுப் போன நிலையில் இராணுவத் தயாரிப்பாணத்தின் மீதும் தமிழ் மக்கள் மீதும் விடுதலைப் புலிகள் மீதும் சிறிலங்கா அரசு ஏவிவிட்டது. இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்டி மாவட்ட அபிவிருத்திச்சபை என்றொரு மாயையைக் காட்டியதன் மூலம் போராட்டத்தை நசுக்கிவிடத் திட்டமிடப்பட்டது. மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் மூலம் பெருகிவரும் சிங்களக் குடியேற்றத்துக்கு அணைகட்டலாம் என்று கூட்டணியினரும் கூக்குரலிட்டனர் ஆனால் நடைமுறையில் தேசிய இனப் பிரச்சினைக்கு இடைக்கால தீர்வு எனக் கூட்டணியினர் கருதிய மாவட்ட அபிவிருத்திச் சபை செல்லாக்காசாகி செயலற்றுப் போயிற்று.

இதன் பின்னர் இரத்தம் தோய்ந்த கறுப்பு யூலாய்க்கு பின்னர் கூட்டப்பட்ட அனைத்து அரசியல் கட்சி மாநாட்டின் மூலமும்கூட தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. அப்போது இந்திய அரசின் ஒருவித அனுசரணையோடு முன்மொழியப்பட்ட இணைப்பு 'சி' திட்டத்தை குழப்பியடிக்க என்றே திட்டமிட்டு அரசியல் கட்சிகளின் மாநாட்டிற்கு சமய ஸ்தாபனங்களும், பொது நல அமைப்புக்களும் அழைக்கப்பட்டன. கூடிக் கூடிப் பேசியது தான் மிச்சமாயிற்றே யன்றி எந்த ஆலோசனையும் ஒப்பேறவில்லை.

1985இல் திம்புவிலும் அதன் பின் பெங்களூரிலும் பேச்சுக்கள் நடத்த சிறிலங்கா அரசு முற்பட்ட போதும் எந்த தீர்வுத் திட்டத்தையும் அது முன்வைக்கத் தயாராக இருக்காதது மட்டுமன்றி, மறைமுகமாக இராணுவ நடவடிக்கைகள் மூலம் பேச்சுக்கள் முறிவடைவதற்கும் சிறிலங்கா அரசும், தென்னிலங்கை அரசியல் வாதிகளுமே காரணகர்த்தாக்கள் ஆகின்றனர்.

இந்திய இராணுவத்துடன் போரிட்டு தமிழ் மக்களின் இறைமையை மீட்டெடுக்க விடுதலைப்புலிகள் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்த வேளையிலும் கூட கொழும்பில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு பற்றி சிந்தித்தவர்கள் 'ஜனநாயக மக்கள் சக்தி' என்ற மகுடத்தின் கீழ் ஒரு திட்டத்தை முன்மொழிந்தனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்பட முக்கிய சில எதிர்க்கட்சிகளின் அனுசரணையும் ஆதரவும் இந்த ஜனநாயக மக்கள் சக்தி' திட்டத்திற்கு இருந்ததாகக் கூறப்பட்டது. ஆனால் ஜனாதிபதி தேர்தலில் திருமதி சிறிமாவோ தோல்வி கண்டதும் அத்திட்டம் குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டு விட்டது.

எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான் என்பது ஒரு தமிழ்ப்பழமொழி அது போல தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்று பக்கம் பக்கமாக இதுவரை எழுதப்பட்டவற்றை எடுத்துப் புரட்டிப்பார்த்தால் கூட சிறிலங்காவில் பௌத்த சிங்கள மேலாண்மையை நிலைநாட்ட முயலும் அரசியல் சக்திகள் தமிழர்களுக்கு ஏற்புடைய தீர்வு ஒன்றை முன்வைக்கப் போவதில்லை என்பது புரியும்.

இந்நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்றத் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிப்பதால் தான் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு சரியானது என்று உறுதிப்படுத்தப் பட்டு விடும் என்று கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் கவலைப்படுவது அர்த்தமற்றது கடந்தகால வரலாற்றை மறந்து பௌத்த சிங்கள பேரினவாதிகளுடன் சமரசம் செய்ய முற்பட்ட வரலாற்றுத் துரோகத்தையும் அரசியல் தவறையும் அவர்கள் இப்போதாவது புரிந்து கொள்வது தான் நல்லது

இத்துடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றைக் காண விழையும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிப்பதற்கான காரணம் இன்னும் விசித்திரமானது. முன்னாள் டி ஐ ஜி உடுகம்பொலவின் சத்தியக்கடதாசி, வங்கிகளின் செயற்பாடு பற்றி பாராளுமன்றத்தில் பிரதமர் விடுத்த அறிக்கை, தேர்தல் ஆணையாளரின் அறிக்கை, என்பன போன்ற பிற காரணங்களுக்காக அரசுடன் ஒத்துழைக்க மறுக்கும் எதிர்க்கட்சிகள் இந்தப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை பகிஷ்கரிப்பதால் தான் அரசை ஆட்டங்காணச் செய்ய முடியும் என்று கருத்து தெரிவித்துள்ளது அதாவது நேரடியாக தமிழ் மக்களோடு சம்பந்தப்படாத விடயங்களுக்காகக் கூட தமிழ் மக்களைத் தண்டிப்பது தான் சிறிலங்காவின் அரசியல் நடைமுறையாகி உள்ளது என்பதைத்தான் இது காட்டுகின்றது.

இவை அனைத்தையும் விட மற்றுமொரு முக்கிய விடயம் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டும். அது காலங்காலமாக இந்திய ஊடுருவல் பற்றி தென்னிலங்கைச் சிங்களவர்கள் கொண்டிருக்கும் அச்சமே தமிழர்கள் மீதான வெறுப்புக்கு காரணம் எனச் சொல்லப்படுவதுண்டு. தென்னிலங்கையின் சிங்கள மேலாண்மைவாதிகள் தமிழர்களோடு சமரசம் செய்து கொண்டு இந்திய நலன்களுக்கு ஆப்பு வைப்பார்களா? அல்லது இந்தியாவிற்கு அடிப்பணிந்தாலும் பரவாயில்லை தமிழர்களை அடிமைப்படுத்தினால் போதும் என நினைக்கிறார்களா? இந்தக் கேள்விக்கான விடையைக் காலந்தான் காட்டவேண்டும். எனினும் தமிழ் மக்கள் தமது சுதந்திரத்தையும், இறைமையையும் நிலைநாட்ட தொடர்ந்தும் தமது இறுதி மூச்சு இருக்கும் வரை போராடுவார்கள் என்பது மட்டும் நிச்சயமானது.

இனியவன்

## சட்டமன்ற நடவடிக்கைகளில்

## துர்க்கையம்மன் ஆலயத்தில்

தமிழர் பிரச்சினைக்கு ஏற்புடைய தீர்வுத்திட்டம் எதையும் முன்வைக்குமா என்பதைவிட, தற்பொழுது பாராளுமன்றத் தெரிவுக்குழு தொடர்ந்தும் இயங்குமா என்பதும் கேள்விக்குரியதாகியுள்ளது.

பாராளுமன்ற தெரிவுக்குழு இவ்வாறு நொடிந்து போனதற்கு முக்கிய காரணம் பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியே ஆகும். அரசாங்கத்துடன் ஏற்பட்ட வேறு முரண்பாட்டைக் காரணமாக வைத்து பாராளுமன்றத் தெரிவுக்குழுவை சிறிலங்கா சுதந்திரக் கட்சி பகிஷ்கரித்துள்ளது இதன் காரணமாக பாராளுமன்றத் தெரிவு குழுவின் செயற்பாடு முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை அதன் தலைவர் மங்கள முனசிங்காவும் பதவி விலக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது இந்நிலையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் தமிழர் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக தீர்வு எதையும் முன்வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்னேற்றகரமான தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைத்து இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிடப் போவதில்லை என்பதை தமிழர் தரப்பு முன்னரே விளங்கிக் கொண்டிருந்தது. இருப்பினும் தெரிவுக்குழு நொடிந்து போனமை இனப் பிரச்சினைகுறித்து அரசியல் தீர்வு எதையும் அரசாங்கம் முன்னெடுக்க முடியாத ஒரு இக்கட்டான நிலை அடைந்துள்ளது என்பதும் ஒரு புதிய நெருக்கடியாகும்.

இவ்வாறாக பிரதான சிங்கள அரசியல் கட்சிகளே இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு நடவடிக்கையிலும் முட்டுக்கட்டைபோட்டு குழப்பியடித்துக்கொண்டிருக்கையில் மேலும் ஒரு அழுத்தமாக இந்தியா விடுதலைப் புலிகள்மீது தடைபோட்டு சமாதானத்திற்கான ஒளிக்கீற்றுக்களையும் முற்றாக மறையச் செய்துள்ளது. புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதை இந்திய அரசாங்கம் வெளிப் படையாகவே எதிர்க்கும் நிலையில் உள்ளது.

இவ்வாறாக இனப்பிரச்சினை தீர்விற்கு அரசியல் ரீதியான முயற்சிகள் யாவும் தோல்வி கண்டு அரசியல் ஓர் மந்த நிலையில் இருக்கும்போது இனப்பிரச்சினைக்கு இரண்டு மாதத்தில் தீர்வு காணப்படுமென பிரதம மந்திரி டி. பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளமை எந்த அடிப்படையைக் கொண்டது? இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்பதே ஓரவழி என்ற ரீதியில் ஆனதா?

தற்பொழுது வடக்கில் சிறிலங்கா இராணுவம் நடத்திவரும் இருபெரும் இராணுவ நடவடிக்கைகள் இதனை வலியுறுத்துவதாகவே உள்ளன. இராணுவ அதிகாரபீடத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்துடன் கடந்த சில மாதங்களாக ஓய்ந்திருந்த இராணுவ நடவடிக்கைகள் தற்பொழுது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும், தென்னிலங்கையில் தீவிர பௌத்த பேரினவாத சக்திகளும் இராணுவமும் பலம்பெற்று வருகின்றமையும் இதனையே கோடிகாட்டுவதாக உள்ளன.

ஆனால் தற்பொழுது மந்த நிலையில் கிடக்கும் அரசியல் நடவடிக்கை மூலமாகிலும் சரி தற்பொழுது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கை மூலமாகிலும் சரி இரண்டு மாதத்துக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது நடைமுறைச் சாத்தியமற்றது. இவ் யதார்த்த நிலையை மீறிச் சிறிலங்கா பிரதமர் டி. பி. விஜயதுங்கா பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்றால் அவரது கையில் அலாவுதீனின் அற்புத விளக்குத்தான் இருக்கவேண்டும்.

# நீதிமன்றங்கள் தலையிடலாமா தெளிவான வரையறை தேவை

**- சேடப்பட்டி முத்தையா**

(டில்லி)

மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட சட்டமன்றம் மற்றும் பாராளுமன்றம் ஆகியவற்றின் நடவடிக்கைகளில் நீதிமன்றங்கள் தலையிட முடியுமா என்பது தெளிவாக வரையறுக்கப் படல் வேண்டும் என்று தமிழக சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா வலியுறுத்தியுள்ளார்.

குஜராத் மாநிலம் காந்தி நகரில் நடைபெற்ற சட்டமன்றம் மற்றும் மேலவைத் தலைவர்களின் மாநாட்டில் பேசிய அவர்மேலும் சட்டமன்றம், பாராளுமன்றம் ஆகியவற்றின் நடவடிக்கைகளில் நீதிமன்றங்கள் தலையிடுமானால் அவை சுதந்திரமாகச் செயற்பட முடியாத நிலை ஏற்படும் என்றும் தெரிவித்தார்.

## ஆப்கானிஸ்தான்

# இடைக்கால அதிபரால் உடன்பாடு நிராகரிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இருந்து கூட்டுப் பந்தோபஸ்து படைகளை விலக்கிக் கொள்ள வேண்டுமென்ற கிளர்ச்சிக் குழுத் தலைவர்களின் கோரிக்கையை இடைக்கால அரசுத்தலைவர் முப்பத்துல்லா முஜாததி நிராகரித்து விட்டார்.

தற்போதைய ஆப்கான் பாதுகாப்பு அமைச்சரான மசூததிற்கும், கிளர்ச்சித் தலைவரான குல்புதின் ஹெக்மதியாருக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் எழுப்பப்பட்ட இந்தக் கோரிக்கையை அவர் நிராகரித்தார்.

இந்த உடன்பாட்டையே நிராகரித்த இடைக்கால அரசுத்தலைவர் முஜாத்தி தமது அனுமதியில்லாமல் ஜெனரல் அப்துல றசீத் தோசும் தலைமையிலான படைகள் விலக்கிக் கொள்ளாது என்றும் கூறிவிட்டார்.

இதேவேளை ஜெனரல் தோசின் படைகள் விலக்கிக் கொள்ளப்படாவிட்டால் இடைக்கால அரசில் சேரப் போவதில்லை என்று குல்புதின் ஹெக்மத்தியார் அறிவித்துள்ளது தெரிந்ததே.

# யுத்த நிறுத்த மீறல்

(சரயேவோ)

சோவியத் யூனியனின் படைகள் நேற்று முன்தினம் சரயேயோ நகர்மீதுஷெல் தாக்குதல்களை நடாத்தின. ஐக்கிய நாடுகள் ஆதரவுடனான யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்து இரண்டு மணித்தியாலங்களில் இந்த சம்பவம் நடைபெற்றதாக தெரிவிக்கப் படுகிறது.

## செர்பியர்களுக்கு எதிரான

# ஐ.நா.தடைகளை அமுலாக்க சீனாவும் முன்வந்துள்ளது

[பீக்கிங்]

செர்பியாவிற்கு எதிரான ஐ. நா. பாதுகாப்புசபை விதித்த பொருளாதாரத் தடை நடவடிக்கைகளை தானும் பின்பற்றப் போவதாக சீனா அறிவித்துள்ளது இது தொடர்பாக சீன வெளியுறவு அமைச்சகம் பீக்கிங்கில் வெளியிட்ட அறிக்கையொன்றில் செர்பியாவுக்கு எதிரான ஐ. நா. வின் பொருளாதார தடைகளை சீனா கடைப்பிடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐ. நா. பாதுகாப்பு சபையில யூக்கோ செலவாக்கிய விவகாரங்கள் தொடர்பான விவாதங்களின் வாக்கெடுப்பில் சீனா கலந்து கொள்ளவில்லை என்பதும். இத் தடை நடவடிக்கைகள் நிலைமையை மேலும் சிக்கலாக்கும் என சீனா கருத்து வெளியிட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பதற்றத்திற்குள்ளான மாநிலங்களில்

# தகவல ஒலிபரப்பு ஊழியரின் பாதுகாப்பு பலப்படுத்தப்படும்

துணை இராணுவப் படைகளை பணியில் ஈடுபடுத்துவதன் மூலம் ஆகாசவாணி, மற்றும் தூரதர்ஷன், நிறுவன அமைப்புகளுக்கும், பஞ்சாப், காஷ்மீர் போன்ற பதற்றத்திற்குள்ளான மாநில நிலையங்களின் ஊழியர்களின் பாதுகாப்பிற்குமான ஏற்பாடுகளைத் தீவிரமாக்குவது என்று இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மத்தியஉள்துறை அமைச்சர் எஸ். பி. சவான், தகவல் ஒலிபரப்புத்துறைஅமைச்சர் அஜித் குமார் பாஞ்சாவும் சந்தித்துப் பேச்சுநடத்தி இவ்விதம் முடிவு செய்துள்ளனர். இந்த இரு தகவல் ஒலிபரப்பு சாதனத் துறைகளில வேலை பார்க்கும் ஊழியர்கள் அவர்களின் பணி இடத்திற்கு செல்வதற்கான போக்குவரத்து வசதிகளையும் செய்தித் தகவல் அமைச்சு அளிக்கவுள்ளது

பஞ்சாப் மாநிலத்தின் பட்டியாலா நகர தூரதர்ஷன் அலுவலகப் பொறியாளரான மஞ்சந்தார் அண்மையில் தீவிரவாதிகளால் கொலையுண்டது தெரிந்ததே.

# இடிபாடுகள் மத்தியில் நித்திய பூசை ஆரம்பம்

(நமது நிருபர்)

இடிபாடுகளுக்கும் மத்தியில் நேற்று நண்பகல் பிராயச்சித்த அபிஷேகத்துடன் தெல்லிப் பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் வழமையான பூசைகள் ஆரம்பமாகின.

நேற்று முன்தினம் சிறிலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சு விமானங்கள் மேற்படி ஆலயத்தின் மீது மேற்கொண்ட அகோரக் குண்டு வீச்சினால் ஆலயம் பலத்த சேதமடைந்ததுடன் அங்கு அடைக்கலம் புகுந்திருந்த ஆறு பேர் பலியானதும் இருபதும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததும் தெரிந்ததே

இதனைத் தொடர்ந்து நேற்று நண்பகல் இடிபாடுகள் எதுவும் அகற்றப்படாத நிலையில் ஆகம விதிப்படி விக்கிரகங்களுக்கான பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று வழமை போல்பூசைகள் ஆரம்பமாகின.

மேற்படி நித்திய பூசையில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# துர்க்கை அம்மன் ஆலய மகளிர் இல்லம் இடமாற்றம்

(நமது நிருபர்)

தெல்லிடபழை துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத்தினரால் நடாத்தப்படும் பெண்கள் பராமரிப்பு நிலையம் இடமாற்றப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக சகல வசதிகளுடனும் 80 ற்கு மேற்பட்ட சிறுமிகள், யுவதிகள் அங்கு பராமரிக்கப்பட்டு வந்தனர்.

நேற்று முன்தினம்சிறிலங்கா இராணுவ குண்டுவீச்சு விமானங்கள் மேற்படி ஆலயத்தின் மீது நடாத்திய குண்டு வீச்சுத் தாக்குதலின்போது இவர்கள் தெய்வாதீனமாக தப்பிக் கொண்டனர். இதனைத் தொடர்ந்து இப்பகுதியில ஏற்பட்ட பதற்றத்தினால் இவர்கள் அனைவரும் அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் நல்லூர் கம்பன் கோட்டத்தில் தற்காலிகமாக தங்கவைக்கப் பட்டுள்ளனர். (ச)

# இந்துமதகுருமார் ஒன்றியம் கண்டனம் தெரிவிப்பு

அண்மையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம் விமான குண்டு வீச்சு மூலம் அழிக்கப் பட்டதற்குஇந்துமத குருமார் ஒன்றியம் தனது கவலையையும் அதிர்ச்சியையும் தெரிவித்துள்ளது,

மேலும் ஆலய விக்கிரகம் சேதமாக்கப்பட்டமையும் பக்தர்கள் பலியானதும் அனாதை இல்லம் சேதமாக்கப்பட்டமை குறித்தும் குருமார்கள் கண்டனம் தெரிவிப்பதுடன் ஆலயங்கள் அழிக்கப்படுவதையும் அப்பாவி பொதுமக்கள் தாக்கப் படுவதையும் நிறுத்துமாறும் அரசிற்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஐக்கிய இலங்கையும் ஒரே தலைவரும் வேண்டும்

## புளொட் அறிவிப்பு

(கொழும்பு)

''எமக்குத்தேவை ஐக்கிய இலங்கையும் ஒரே தலைவரும் ஆகும்'' இவ்வாறு புளொட் குழுவின் வவுனியா தலைவர் சிவபாரதி 'சண்டேரைம்ஸ்' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

எமது குழுவிற்கு தனிநாடு தேவையில்லை. சிறிலங்கா இராணுவத்திற்கான எமது ஒத்துழைப்பு எமது தமிழ் நாட்டுப்பற்றை நிரூபித்துள்ளது. என மேலும் அவர் தெரிவித்தார்.

ஈழநாதம்

# சிறிலங்கா அரசின் செயல்கள் நியாயப் படுத்த முடியாதவை

## -தமிழர் நலன்காக்கும் ஒன்றியம்

கடந்த சில தினங்களாகநடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது பத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் பலியாகியும், நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் காயமுற்றும் உள்ளனர். மேற்படி இராணுவ நடவடிக்கைகளின் போது நியாயப்படுத்த முடியாதவகையில் மருத்துவமனைகள், ஆலயம், இடம்பெயர்ந்தோர் முகாம்கள் என்பன அகோர தாக்குதல்களுக்குள்ளாகியுள்ளன. காயப்பட்டவர்களை ஏற்றிச் சென்ற அம்புலன்ஸ் வாகனங்கள் உலங்குவானூர்திகளின் கடும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. அரசு, மக்களுக்கெதிராக திட்டமிட்டு செய்து வரும் இவ்வநீதிகளை தமிழர் நலன்காக்கும் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்து செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அச்செய்தியில்; சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பில் நம்பிக்கைவைத்து செயல்பட்டு வந்த துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மீது நடைபெற்ற தாக்குதல், சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக மக்களிடையே அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. மேற்படி தேவஸ்தானத்தில் 80 க்கு மேற்பட்ட ஆதரவற்ற பெண்களும், 150 க்கு மேற்பட்ட இடம்பெயர்ந்த குடும்பங்களும் தங்கியிருந்தனர். அத்துடன் இப்பகுதி தாக்குதலுக்கு உள்ளாகாது என்ற நம்பிக்கையில் அயலில் உள்ள மக்களும் இங்கு தங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளமுடியாத இத்தாக்குதல்கள் நடைபெற்று முடிந்த 24 மணிநேரம்வரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சம்பவம் நடைபெற்ற இடங்களுக்கே செல்லாததையிட்டு தமிழர் நலன்காக்கும் ஒன்றியம் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறது என்று குறிப்பிட்டுள்ளது.

---

விவசாய பயிற்சிக்

சுற்றறிக்கை இனவிகிதாசார அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறவேண்டுமென கூறுகிறது. இக் குண்டசாலை தெரிவில் இனவிகிதாசாரம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் இதனை மீள் பரிசீலனை செய்து இனவிகித அடிப்படையில் 12.7 விகிதம் தமிழருக்கு ஒதுக்க வேண்டுமென தமிழ் மாணவர்கள் கேட்டுள்ளனர்.

---

# ஈழத்தமிழரை ஆதரிக்க எங்களுக்கு உரிமையில்லையா?

விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான இந்திய மத்திய அரசின் தடை உத்தரவை அடுத்து விடுதலைப் புலிகளின் நோக்கத்திற்கு ஆதரவாக எந்தத் தனி ஆளோ, இயக்கமோ செயல்பட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்திய உள்துறை அமைச்சர் சவான் எச்சரித்திருப்பதை தமிழக பத்திரிகைகள் கண்டனம் செய்துள்ளன.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்குத் தனிநாடு (சுதந்திர ஈழம்) வேண்டும் என்பது விடுதலைப் புலிகளின் கொள்கை ஈழத் தமிழ் மக்களுக்குத் தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கையை தமிழகத்துத் தமிழர்கள் ஆதரிக்கக் கூடாதா? என்று சென்னையிலிருந்து வெளிவரும் 'ராணி சஞ்சிகை' இந்திய மத்திய அரசைக் கேட்டுள்ளது.

சமீபத்தில் வெளிவந்த ராணி இதழில் ஈழத்தில் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். தமிழ்ப்பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள். இதைப் பார்க்கும் தமிழனுக்கு இங்கே உள்ள தமிழனுக்குத் தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடாதா? அவர்களைக் காப்பாற்ற கை கொடுத்து உதவ முடியாவிட்டாலும் அவர்களுக்காகக் கண்ணீர் வடிக்க மாட்டானா?

சரி! இந்திய அரசு என்ன செய்யப் போகிறது? இலங்கைத் தமிழர்களை அடியோடு கைவிடப் போகிறதா?

இதற்கு சவான் விளக்கம் கூறவேண்டும் என்று அச்சஞ்சிகை குறிப்பிடுகிறது.

---

பொலிஸ்

பிரேமதாசா கலந்துகொண்ட ஜன திபதி இடம்பெயர்சேவையின்போதே இச்சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் நாய் இனங்காட்டியவுடன் இராணுவஉளவாளிகள் குறிப்பிட்ட சிறுவனைக் கைதுசெய்தனர் என்று சொல்லப்பட்டது. சிறுவனின் பெயர் விபரங்கள்அறியப்படவில்லை. (தி)

---

புலிகளின்

ணுவ முகாமிற்குச் சென்று கொண்டிருந்த ஜீப் மீதே இத்தாக்குதல் நடாத்தப்பட்டது.

இந்த ஜீப்பில் இராணுவ அதிகாரி ஒருவர் பிரயாணம் செய்துகொண்டிருந்தார்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள்தரப்பில் கப்டன்மகோதரன் (கிறிஸ்ரி - இன்னாசி கிருபைராசா, கித்துள், கரடியனாறு) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமதுவீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

---

எறிகணைவீச்சு

காலை முதல் மாலை வரை இடையிடையே இத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. தெல்லிப்பழைஅம்பனை. ஏழாலை ஆகிய பகுதிகளிலேயே பல எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன.

---

மன்னாரில்

டும் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் மன்னார் அரசாங்க அதிபர் கூறியுள்ளார்.

---

புலிகளுக்கு

கண்டிக்கும் வகையில் தமிழகம் வரும் மத்திய அமைச்சர்

---

வைத்திய

துவம் மட்டுமே இங்கு பணிபுரிகின்றனராம். தவிர, தளபாட வசதியீனமும் இங்கு ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சீர் கேடுகளினால் நோயாளர்கள்தனியார் வைத்தியர்களை நாடும் நிலை ஏற்பட்டுள்ளதென்றும், சமீபத்தில் குப்பி விளக்கு உடம்பில் எரிந்து காயமடைந்த இளம் மாணவி ஒருவர் வைத்திய வசதியின்மையால் மரணமானார் என்றும் சொல்லப்பட்டது. (தி)

---

ஆலயங்கள்

ஒரு சமய அமைப்பு என்ற வகையில் கடந்த 31 மே 1992 அன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலினால் நாம் பெரிதும் அதிர்ச்சியும் குழப்பமும் அடைகிறோம் என்றும்,

இப்பாரதூரமான சம்பவத்தினால் பல அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டும், காயப்படுத்தப்பட்டும் உள்ளனரென்பதையும், புனித விக்கிரகங்கள் அழியுண்டு ஆலயம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதென்பதையும் மிகவும் கவலையுடன் அறியத்தருகிறோம். நீங்கள் வவுனியாவில் சமாதானம் பற்றிப் பேசிக் கொண்டிருந்த அதேவேளை, உங்கள் பாதுகாப்புப் படையினர் ஆலயம் மீதான இக்குண்டுத்தாக்குதலை நடாத்தியது வருந்தத்தக்க செயலாகும்

---

# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 29-05-1964



தாயக மண்ணில் 03-06-1986

## திருநாவுக்கரசு பிரதீபன்

### வீரவேங்கை தீபன்

காலங்கள் சாகவில்லை
உன் நெஞ்சின் கடமைகளும் சாகவில்லை
பாரினில் உன்புகழ் என்றும் திகழ்கவே.

பிரதீபன் வீதி, உன் பிரிவால் வாடும்,

---

# அலம்பில் சமரில் சாதனைபடைத்து வீரச்சாவடைந்த 11 வேங்கைகள்



வீரவேங்கை
கணேசன் (நிக்லஸ்)
(பாலச்சந்திரன்ரகுதாஸ்)



வீரவேங்கை
பதுமன்
(வேலுப்பிள்ளை ராஜேந்திரன்)



வீரவேங்கை
கதிரவேல் (கோபு)
(ஈஸ்வரன் ராசன்)



வீரவேங்கை
கிருஷ்ணமூர்த்தி
(சிவராசா பரமநாதன்)



வீரவேங்கை
தியாகு
(இராசையா சிவகுமார்)



வீரவேங்கை
அமுதன்
(சிவபாதம் அமுதன்)

01-06-1992 அன்று முல்லைத்தீவு மாவட்டம் அலம்பில் சந்தியை நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது பல மணிநேரம் தொடர்ச்சியான தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர். 2500க்கு மேற்பட்ட இராணுவத்தினர் 40 க்கு மேற்பட்ட கவசவாகனங்கள், விமானக்குண்டு வீச்சுகள், எறிகணை வீச்சுகள் மத்தியில்

தாயின்
மடியில்
29-05-1964



தாயக
மண்ணில்
03-06-1986

## திருநாவுக்கரசு பிரதீபன்

### வீரவேங்கை தீபன்

காவலிகள் சாகவில்லை
உன் நெஞ்சின் கடமைகளும் சாகவில்லை
பாரினில் உன்புகழ் என்றும் திகழ்கவே.

பிரதீபன் வீதி, உன் பிரிவால் வாடும்,
சுண்டிக்குளி, அப்பா, அம்மா, சகோதரர்கள்,
யாழ்ப்பாணம். உற்றார், உறவினர்கள், நண்பர்கள்

[4501]

# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியம் சின்னையா

திருமதி பாக்கியம் சின்னையா அவர்கள் 02-06-92 செவ்வாய்க்கிழமை மகிமைக்குள் பிரவேசித்து விட்டார். அன்னார் திரு. க. அ. சின்னையா [ஸ்தாபகர், க. அ. சின்னையா அன் சன்ஸ்] அவர்களின் அருமை மனைவியாரும், அ. சி. ஜெபரத்தினம் [டேவிட், பிரதம பங்காளி, சின்னையா அன் சன்ஸ்], திருமதி புளோறன்ஸ் ராஜசிங்கம், அ. சி. ஜீவரத்தினம் [சாம், பங்காளி, சின்னையா அன் சன்ஸ்], சி. ஜெயரத்தினம் [ஜேக்கப். இளைப்பாறிய தேயிலைத் தொழிற்சாலை உயர் அதிகாரி Downசைட், வேவெஸ்ச குறாப் பதுளை, தற்போதைய பங்காளி, சின்னையா அன் சன்ஸ்] ஆகியோரின் அருமைத் தாயாரும், தா. சா. ராஜசிங்கம் [இளைப்பாறிய பெருந்திணைக்கள அதிகாரி கொழும்பு] அருள், பிறேமா, ராஜி ஆகியோரின் அன்பு மாமியாரும், கீதாஞ்சலி [ஹொங்கொங் வங்கி, கொழும்பு] சுகந்தராஜ் [மருத்துவத்துறை மாணவன் ஜேர்மனி] சுகந்தினி [முன்னாள் உடுவில் மகளிர் கல்லூரி மாணவி] வவன்ரீனா [உடுவில் மகளிர் கல்லூரி], டில்மினா [வேம்படி மகளிர் கல்லூரி], குமுதினி [உடுவில் மகளிர் கல்லூரி], சுஜீவன் [சென் ஜோன்ஸ் கல்லூரி], ஜீவக்குமார் [யாழ். மத்திய கல்லூரி], சாலினி [உடுவில் மகளிர் கல்லூரி] ஆகியோரின் அருமைப் பேர்த்தியாருமாவார்.

அடக்க ஆராதனை வியாழக்கிழமை (04-06-1992) காலை 8.30 மணிக்கு சுபாஸ் வீதியிலுள்ள [கொத்துக்கட்டி வீதி] அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கல்லுண்டாய் பெந்தக்கோஸ்தே சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சுபாஸ் வீதி, (கொத்துக்கட்டி வீதி) தகவல்:
நவாலி தெற்கு, அ. சி. ஜெபரத்தினம்
மானிப்பாய். [2631] (மகன்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம்ஆண்டு ஜூன் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

காலை முதல் மாலை வரை இடையிடையே இத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. தெல்லிப்பழைஅம்பனை.ஏழாலை ஆகிய பகுதிகளிலேயே பல எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன.

### மன்னாரில்

டும் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் மன்னார் அரசாங்க அதிபர் கூறியுள்ளார்.

### புலிகளுக்கு

கண்டிக்கும் வகையில் தமிழகம் வரும் மத்திய அமைச்சர்களுக்கு சகல அமைப்புகளும் ஒன்றிணைந்து கறுப்புக்கொடி காட்டுவதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

### வடக்கில்

திற்குள் சென்று புலிகளின் தலைமையகத்தைத் தாக்க வேண்டும் என விரும்புகின்றனர் எனவும் கூறினார்.

ஒரு கட்டுப்பாட்டிற்குள் நின்று சண்டையிடக்கூடிய திறமையைப் பெற்றவர்கள் விடுதலைப்புலிகள். யாழ்ப்பாணத்தில் அவர்களுடைய அதிகாரம் நன்கு ஸ்தாபிக்கப்பட்டு விட்டது அவர்கள் அங்கு இறைமையைக் கொண்டுள்ளார்கள். அதனை நிலை நிறுத்துவதற்காக நிச்சயமாக போராடுவார்கள் என யாழ்ப்பாணத்தில் வசித்த தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

துர்க்கை அம்மன் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலினால் நாம் பெரிதும் அதிர்ச்சியும் குழப்பமும் அடைகிறோம் என்றும்,

இப்பாரதூரமான சம்பவத்தினால் பல அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டும், காயப்படுத்தப்பட்டும் உள்ளனரென்பதையும், புனித விக்கிரகங்கள் அழியுண்டு ஆலயம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதென்பதையும் மிகவும் கவலையுடன் அறியத்தருகிறோம். நீங்கள் வவுனியாவில் சமாதானம் பற்றிப் பேசிக் கொண்டிருந்த அதேவேளை, உங்கள் பாதுகாப்புப் படையினர் ஆலயம் மீதான இக்குண்டுத்தாக்குதலை நடாத்தியது வருந்தத் தக்க செயலாகும் என்றும் அந்த மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும் இந்நிகழ்வுக்கு சுமார் இரண்டேவாரத்துக்கு முன் 18 மே 1992 அன்று வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்த முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் ஆலயத் திருவிழாவின்போது பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட பயங்கரமான இரத்தத்தை உறைய வைக்கும் தாக்குதலையும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றோம் கூடியிருந்த யாத்திரிகர் மீது மேற்கொள்ளப்பட்ட எறிகணைத்தாக்குதலால் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர், குழந்தைகள் உட்படப் பலர் பலியாயினர் இச்சம்பவத்தை விசாரிக்க ஒரு குழுவைத் தாங்கள் நியமித்தது குறித்து நாங்கள் மகிழ்கின்றோம் என்றும் அந்த மகஜர் கூறுகின்றது.

# ஓர் அவசர அழைப்பு

கடந்த 31-05-1992 ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் அரசுப்படையினரால் கண்மூடித்தனமாக நடாத்தப்பட்ட அராஜகத் தாக்குதல்களைக் கண்டித்து, எதிர்க்கும் நோக்கோடு எடுக்கப்படவேண்டிய தொடர் நடவடிக்கைகள்குறித்த கருத்துக்களை ஒன்று திரட்டுமுகமாக இன்று (03-06-92, புதன் கிழமை) மாலை 3-00 மணிக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இவ் ஆலோசனைக் கூட்டத்தில் சமுதாய பொறுப்புள்ள அனைத்து சமய சமூக கலை இலக்கியப் பண்பாட்டு பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள், அருளாளர்கள், அந்தணர்கள், ஆலய நிர்வாகிகள், அறிஞர்கள், சான்றோர்கள் அனைவரும் சமூகம் தந்து ஆலோசனைகளை வழங்குமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

- சர்வ சமய, சமுதாய ஒன்றியங்கள்

(சி/4500)



வீரவேங்கை
கிருஷ்ணமூர்த்தி
(சிவராசா பரமநாதன்)



வீரவேங்கை
தியாகு
(இராசையா சிவகுமார்)



வீரவேங்கை
அமுதன்
(சிவபாதம் அமுதன்)

01-06-1992 அன்று முல்லைத்தீவு மாவட்டம் அலம்பில் சந்தியை நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது பல மணிநேரம் தொடர்ச்சியான தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர். 2500க்கு மேற்பட்ட இராணுவத்தினர் 40 க்கு மேற்பட்ட கவசவாகனங்கள், விமானக்குண்டு வீச்சுகள், எறிகணை வீச்சுகள் மத்தியில் விடுதலைப் புலிகள் தீரமுடன் போரிட்டனர் இச்சண்டையில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இத்தீரமிகு தாக்குதலில் 11 வீரவேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர் இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



வீரவேங்கை
யோகமூர்த்தி
(வாணன்)
வெள்ளைக்கண்டு)
விஜயகுமார்)



வீரவேங்கை
மயூரன் (இடியாம்பி)
(இராசலிங்கம்
ஆனந்தராசா)



வீரவேங்கை
விசுவாசம்
(ஐயம்பிள்ளை
ஜெயக்குமார்)



வீரவேங்கை
இறைகுமாரன்
(தயாளன்
ரவீந்திரநாதன்)



வீரவேங்கை
யேசுநேசன்
(பொன்னம்பலம்
(செந்தமிழ்ச் செல்வன்)